## மணநாள் வாழ்த்து! 08-07-2020



நாற்பத்து நான்காம் ஆண்டில் தொடரும்,
நலிவில்லா இல்லற வாழ்வின் பயணம்!
பொலிவுடன் நாட்கள் கழிந்து மகிழ்வில்,
பூரிக்கும் மனத்தை ஆளும் எங்கள்,

பொன்னிகர் அண்ணன் **ஜெயபால்** வுடன்;
தன்மைசீர் அத்தாத்தை **விஜய லஷ்மி!**
தகைவுடன் அமைந்த காலம் மனத்தில்,
தனிக்கதைத் தன்னைப் பேசி மகிழும்!




இனியராம் மக்கள் இருவரும் மண்ணில்,
இனியதாய் வாழ்வைக் காணச் சீருடன்,
இனியதாய் மலர்ந்தப் பெயர்த்தி **இரக்ஷனா,**
இளவலாம் பெயரன் சீர்**தருண் கிருஷ்ணா**

களமெனக் கண்ட இன்பம் வளர்ந்து,
காலத்தால் இன்னும் நிறைந்து ஏக,
கோலமாய்ப் பொன்விழா தனையும் அடைய,
பொலிவுடன் நாங்கள் மகிழ்ந்தே அன்றும்;

புதியதாய் வாழ்த்துக் கூறி மனத்தில்
பூரித்து எழுந்தே மகிழ்ந்து நிறைவோம்!
அரியாதாம் நாளே இன்று
அவனிசூழ் இன்பம் மேவி வாழ்வீரே!





**அன்புடன்,**
**கு.ப. அசோகன் & மங்கை,**
**பாலாஜி & சத்யா, ஸ்ரீராம்,**
இவர்களுடன்,
**யாழினியும் அத்தையும்.**





